සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Department of Provincial Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Department of Provincial Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Department of Provincial Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Department of Provincial Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Department of Provincial Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Department of Provincial Education

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

Department of Provincial Education - NWP

වැඩමෙල් මාකාණක් කල්වித් තිණෙක්කළම්

61	T	I

පළමු වාර පරීක්ෂණය - 11 ශ්‍රේණිය - 2018

First Term Test - Grade 11 - 2018

முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2018

சுட்டிலக்கம் ..... **புவியியல் I** **நேரம் : 1 மணித்தியாலம்**

கவனிக்க :

- **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

- 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01. கடல் மட்டத்தில் இருந்து வளிமண்டலத்தின் மேலே 50 km தொடக்கம் 80 km வரை ..... மண்டலம் பரந்து உள்ளது.

(மாறன் மண்டலம், படை மண்டலம், இடை மண்டலம்)

02. புவியின் நிலத்திணிவில் 2/3 பங்கு ..... க்கு உரியதாகும்.

(ஓடு, மூடி, மையம்)

03. புவியின் வடக்கு மற்றும் கிழக்கு அகலங்கு 30^0 தொடக்கம் 50^0 வரையான பிரதேசங்களில் பரவி இருப்பது

..... காடுகளாகும்.

(அயன மலை, இடை வெப்ப, ஊசியிலை)

04. தஸ்மேனியா தீவு அமைந்திருப்பது ..... கண்ட தகட்டில் ஆகும்.

(ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா)

05. இலங்கையின் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்திருப்பது ..... மாவட்டத்திலாகும்.

(களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி)

06. உலகிற்கு சூழல் நேய உற்பத்திகளை தருவது ..... கைத்தொழிலாகும்.

(இரும்புருக்கு, நெசவு, இலத்திரனியல்)

07. இலங்கையின் வலுச்சக்தி உற்பத்தியில் அதிகமாக பயன்படுத்தப்படும் வலுச்சக்தி ..... ஆகும்.

(பெற்றோலியம், நீர்மின்சாரம், உயிர்த்திணிவுகள்)

08. இலங்கையில் பாரம்பரிய குடிசைக் கைத்தொழிலான பிரம்பு தொடர்பான உற்பத்திகளுக்கு பிரசித்தம் பெற்ற

பிரதேசமாக ..... காணப்படுகின்றன.

(மொரட்டுவ, பிலிமதலாவ, ரதாவடுன்ன)

09. இலங்கையில் உர உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் தொலமைட் ..... பாறைக்கு உரியதாகும்.

(தீப்பாறை, அடையற்பாறை, உருமாறிய பாறை)

10. முழுமையாக சிதைவடைந்த தாய்ப்பாறையும் சேதன பொருட்களை அதிக அளவில் கொண்டுள்ளதுமான

மண் படை ....., ஆகும்.

(A, B, C)

www.lkedu.lk

- 11 தொடக்கம் 15 வரையான கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" எனவும் பிழையாயின் "பி" எனவும் சுற்றி வட்டமிடுக.

11. புவியின் உற்புரதத்திலே வெப்பம் அடைந்த மெக்மா புவிமேற்பரப்பில் வந்து குளிர்வடைவதால் தீப்பாறைகள் உருவாகின்றது. (ச/பி)
12. இலங்கையில் அதிகளவான மீன் உற்பத்தி கரையோரம் சார்ந்த கடற்பிரதேசங்களில் இடம்பெறுகிறது. (ச/பி)
13. இலங்கையின் மத்திய நிலத் தேயிலை 1200m ரை விட உயர்ந்த பிரதேசங்களில் பயிரிடப்படுகின்றது.(ச/பி)
14. இலங்கையில் தடைவிதிக்கப்பட்ட இயற்கை ஒதுக்கு பகுதியாக சிங்கராஜ காடு அடையாளம் இடப்பட்டுள்ளன. (ச/பி)
15. இலங்கையின் கரையோரம் சார்ந்த பிரதேசங்களிலும் நதிப்பள்ளத்தாக்குகளை சார்ந்த பகுதிகளிலும் கனிய மணல் அதிகமாக பரவியுள்ளது. (ச/பி)

- 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு "அ" மற்றும் "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையிலான தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையை தெரிவு செய்து கோடிடுக.

16. உலகில் உள்ள சில நதிகளின் பெயர்கள் "அ" நிரலிலும் அவை சங்கமிக்கின்ற கடல்கள் "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாகப் பொருத்தினால் கிடைக்கும் விடை.

அ	ஆ
1. நைல்நதி	A. கஸ்பியன் கடல்
2. குவாங்கோ நதி	B. மத்திய தரைக் கடல்
3. வோல்கா நதி	C. மஞ்சள் கடல்
	D. செங்கடல்

1. CAD 2. BCA 3. DBC 4. ADB (.....)

17. இலங்கையில் உள்ள காடுகள் சில "அ" நிரலிலும் இவற்றில் காணப்படும் தாவர வகைகள் "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாகப் பொருத்தினால் கிடைக்கும் விடை.

அ	ஆ
1. உலர் கலப்பு என்றும் பசுமையான காடுகள்	A. கரம்பு, ஏரமினியா
2. முற்புதர் காடுகளும் பற்றைக் காடுகளும்	B. கிரள தியகதுர
3. மலைநாட்டு உலர் வலயக் காடுகள்	C. முதிரை, கருங்காளி
	D. மகரத்மல், அரலு

1. CAD 2. DBC 3. BCD 4. BDC (.....)

18. இலங்கையின் விவசாய நடவடிக்கைகள் சில "அ" நிரலிலும் அவை அமைந்துள்ள பிரதான நிலையங்கள் "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாகப் பொருத்தினால் கிடைக்கும் விடை.

அ	ஆ
1. சிறு ஏற்றுமதிப் பயிர்	A. மீவன பலான
2. இரசாயண பசளை	B. மாகதுர
3. பசும்பால் வள மத்திய நிலையம்	C. நாதான்டியா
	D. மாத்தளை

1. BCA 2. DCB 3. DBA 4. DAB (.....)

19. இலங்கையில் கிடைக்கப்பெறுகின்ற கனிய வளங்கள் சில "அ" நிரலிலும் அவை அமைந்துள்ள பிரதேசம் "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாகப் பொருத்தினால் கிடைக்கும் விடை.

அ	ஆ
1. சிலிக்கா	A. புல்மோட்டை
2. இல்மணைட்	B. ஒக்கம்பிடிய
3. இரத்தினக்கல்	C. நாத்தான்டியா
	D. மாதம்பை

1. ACB 2. DBA 3. BCA 4. CAB (.....)

20. இலங்கையில் காணப்படும் வலு வளங்கள் சில "அ" நிரலிலும் அவை அமைந்துள்ள இடங்கள் "ஆ" நிரலிலும் காட்டப்பட்டுள்ளது. அவற்றை சரியாகப் பொருத்தினால் வரும் விடையை தெரிவு செய்க..

அ	ஆ
1. சூரிய சக்தி	A. பறுதகந்த
2. காற்று சக்தி	B. லக்ஷபான
3. அனல் மின் சக்தி	C. புத்தளம்
	D. கெரவளபிடிய

1. DBC 2. CDA 3. BAC 4. ACD (.....)

www.lkedu.lk

- 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களை பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.

21. புவியின் கட்டமைப்புக்கு அமைய சமுத்திர ஓடு ..... பாதையால் ஆனது.


22. அகலாங்கு $23\frac{1}{2}^{0}$ கோடு ..... என அழைக்கப்படும்

23. கோதுமை செய்கைக்கு மிகப் பொருத்தமானது ..... மண்ணாகும்

24. இலங்கையில் அதிகமாக தரைகீழ் நீர் காணப்படுவது ..... மாகாணத்தில் ஆகும்.

25. உலகில் அதிக சனத்தொகை வாழ்வது ..... கண்டத்தில் ஆகும்.

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் இலங்கைப்படத்தை பயன்படுத்துக.



26. மஹா இலுப்பல்லம நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் ..... எழுத்தால் காட்டப்பட்டுள்ளது.

27. தப்போவ வாவி அமைந்துள்ள இடத்தை ..... எழுத்தால் காட்டப்பட்டுள்ளது.

28. சிறு தென்னை முக்கோண வலையம் அமைந்துள்ள மாவட்டத்தை ..... எழுத்தால் காட்டப்பட்டுள்ளது.

29. பந்து களிப்படுக்கை காணப்படும் ஒட்டுசுட்டான் எனும் இடத்தை ..... எழுத்தால் காட்டப்பட்டுள்ளது.

30. படகு தயாரிக்கும் இடமான நீர்கொழும்பு ..... எழுத்தால் காட்டப்பட்டுள்ளது.

- 31 தொடக்கம் 38 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

31. ஓசோன் படையானது பூமியை நோக்கி வருகின்ற ஊதாக்கதிர்களை பூமிக்கு வருவதனை தடைசெய்வதனால் வெப்பநிலை அதிகமாகவுள்ள வளிமண்டலப் படை பின்வருவனவற்றுள் எது?
1. மாறன் மண்டலம் 2. படை மண்டலம் 3. இடை மண்டலம் 4. வெப்ப மண்டலம் (.....)

32. உலகிலேயே மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள ஏரி பின்வருவனவற்றுள் எது?
1. பைக்கால் ஏரி 2. தங்கனிக்கா ஏரி 3. தித்திக்கா ஏரி 4. செட் ஏரி (.....)

33. இலங்கையின் கூடிய அகலத்தை அளப்பதற்காக பயன்படுத்தப்படும் முனை ஒன்று பின்வருவனவற்றுள் எது?
1. பேதுரு முனை 2. சங்கமான் கந்த முனை
3. பூனரின் முனை 4. யானை முனை (.....)

www.ilkedu.lk

34. கைத்தொழில் மூலப்பொருளாக பயன்படும் உணவல்லாத பயிர்வகை பின்வருவனவற்றுள் எது?
1. நெல் 2. கோதுமை 3. இறப்பர் 4. கோப்பி (.....)

35. பாதுகாப்பான கரையோரப் பிரதேசம் காணப்பட வேண்டிய முக்கியமான கைத்தொழில் பின்வருவனவற்றுள் எது?
1. இரும்புருக்கு 2. கப்பல் 3. மோட்டார் வாகனம் 4. விமானம் (.....)

36. உலகிலேயே உயர்ரக காரியம் கிடைக்கப்பெறும் நாடு பின்வருவனவற்றுள் எது?
1. இந்தியா 2. பிரேசில் 3. துருக்கி 4. இலங்கை (.....)

37. இலங்கையின் தாழ்நில ஈரவலயங்களில் பரவிக் காணப்படும் மண்வகை பின்வருவனவற்றுள் எது?
1. வண்டல் மண் 2. செம்மஞ்சல் பொட்சோல் மண்
3. செங்கபில நிற மண் 4. செம்மஞ்சல் லட்சோல் மண் (.....)

38. இலங்கையில் காணக்கூடிய உலோகமல்லாத கனியம் பின்வருவனவற்றுள் எது?
1. காரீயம் 2. இரும்புத்தாது 3. செம்பு 4. மக்னீசியம் (.....)

- 39 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்க கீழேயுள்ள தகவல்களை பயன்படுத்துக.

A - காடுகளை அழித்தல்
B - தரைக்கீழ் நீர் மட்டம்
C - வளிக்கோளத்தின் வெப்பம்
D - தரைப்பிரதேசம்
E - சமுத்திர நீர் மட்டம்

39. மேலே கூறப்பட்ட காரணிகளுள் ஒரு காரணியின் அதிகரிப்பால் இன்னொரு காரணியில் அதிகரிப்பை காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?
1. C மற்றும் D 2. C மற்றும் E 3. E மற்றும் D 4. A மற்றும் D

40. மேலே கூறப்பட்ட காரணிகளுள் ஒரு காரணியின் அதிகரிப்பால் இன்னொரு காரணியில் குறைவு ஏற்படும் என்பதை காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?
1. A மற்றும் E 2. E மற்றும் B 3. A மற்றும் C 4. E மற்றும் D

* * *

www.lkedu.lk

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

Provincial Department of Education - NWP

වැඩමෙල් මාකාණක් කල්විත් තිණෙක්කළුම්

61	T	II

පළමු වාර පරීක්ෂණය - 11 ශ්‍රේණිය - 2018

First Term Test - Grade 11 - 2018

முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2018

சுட்டிலக்கம் ..... **புவியியல் II** **நேரம் : 2 மணித்தியாலம்**

- **இவ்வினாத்தாள் I, II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டது.**
- **பகுதி 1இலுள்ள வினா கட்டாயமானது இதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**
- **பகுதி II இலிருந்து நான்கு வினாவிற்கு விடை எழுதுதல் வேண்டும்.**
- **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.**

பகுதி I

01. அ. உமக்குத் தரப்பட்டுள்ள 1:50,000 இடவிளக்கப்படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.


1. இலக்கம் ① இனால் காட்டப்படும் நிர்வாக எல்லை யாது?
   (மாகாண எல்லை, மாவட்ட எல்லை, பிரதேச செயலாளர் பிரிவு எல்லை)
2. இலக்கம் ② இனால் காட்டப்படும் பண்பாட்டு அம்சம் யாது? (பாலம், குடைவழி, சேனைநிலம்)
3. இலக்கம் ③ இனால் காட்டப்படும் இடத்தின் உயரமாவது? (20m, 38m, 45m)
4. இலக்கம் ④ இனால் காட்டப்படுவது யாது? (பொலிஸ், பாடசாலை, நீதிமன்றம்)
5. படப்பிரதேசத்தில் அதிகமாக பரவியுள்ள வர்த்தகப் பயிர் யாது?
6. படப்பிரதேசத்தில் காணப்படும் A எழுத்தால் காட்டப்படும் கோடு யாது?
7. படப்பிரதேசத்தில் பிரதான வீதியில் B தொடக்கம் C வரையான தூரம் எத்தனை கிலோமீற்றர்?

இடவிளக்கவியல் படத்தைப் பயன்படுத்தி பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "ச" எனவும் பிழையாயின் "பி" எனவும் அடையாளமிடுக.

8. பிரதான நதி பாய்ந்தோடுவது மேற்கு எல்லைக்காகும். ( )
9. நெற்செய்கைக்கு அதிகமாக பயன்படுத்தப்படுவது குளத்து நீராகும். ( )
10. படப்பிரதேசத்தில் சமநிலம் மற்றும் தொடரலை நிலம் காணப்படுவதால் பாதை வளைந்து செல்கிறது. ( )

(10 புள்ளிகள்)

ஆ. உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தினை கவனமாக பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



(i) A, B, C எழுத்துக்களால் அவுஸ்திரேலியாவில் இரும்புத்தாது படிவு பரவியுள்ள பிரதேசங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஹமேசல் படிவை காட்டும் ஆங்கில எழுத்து யாது?

(ii) D, E, F எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள பருத்தி பயிரிடப்படும் எகிப்து அமைந்துள்ள இடத்தை

www.ikeu.lk

காட்டும் எழுத்து எது?


(iii) G, H, J எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளவற்றுள் பினாட்டுபோ எரிமலை காணப்படுகின்ற பிலிபைன் தீவைக் காட்டும் எழுத்து எது?

(iv) K, L, M எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள பாற்பண்ணைத் தொழில் உற்பத்தி செய்யப்படும் டென் மார்க்கின் அமைவிடத்தை காட்டும் எழுத்து எது?

(v) P, Q, R எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளவற்றுள் நீர் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்துள்ள ஆபிரிக்காவின் கேப்ரவுன் அமைந்துள்ள இடத்தைக் காட்டும் எழுத்து எது?

(5 புள்ளி)

இ. உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தை கவனமாக பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.



(i) A, B, C எழுத்துக்கில் கயோலின் களிப்படுக்கை காணப்படும் இடமான ரத்தோட்ட பிரதேசம் அமைந்துள்ள மாவட்டத்தை காட்டும் எழுத்து எது?

(ii) D, E, F எழுத்துக்களில் பெல்லன்வில சரணாலயத்தை காட்டும் எழுத்து எது?

(iii) G, H, J எழுத்துக்களில் வட மாகாணத்திலுள்ள நெடுந்தீவைக் காட்டும் எழுத்து எது?

(iv) K, L, M எழுத்துக்களில் கடல்சார் மீன்பிடிக் கைத்தொழில் இடம்பெறும் பம்பல அமைந்துள்ள இடத்தைக் காட்டும் எழுத்து எது?


(v) P, Q, R எழுத்துக்களில் இங்கினியாகல நீர் மின்சார நிலையத்தை காட்டும் எழுத்து எது?

(5 புள்ளி)

www.ikedu.lk

பகுதி II

02.




(i) புவியின் தொகுதிகளில் கற்கோளத்தினை உள்ளடக்கியிருக்கும் இரு பகுதிகளையும் பெயரிடுக. (2 புள்ளி)

(ii) புவியின் கற்கோளமானது பல்வேறு புவியோட்டுத் தகடுகளை கொண்டுள்ளது. மேலே காணக்கூடிய படத்தில் A, B மற்றும் C இனால் காட்டப்படும் புவித்தகடுகளை ஒழுங்கு முறையாக பெயரிடுக. (3 புள்ளி)

(iii) a) கீழே காணப்படும் தீவுகள் எந்த புவித்தகட்டுக்கு உரியது என பெயரிடுக.
மடகஸ்கார், பெரிய பிரித்தானியா

b) புவியின் கற்கோலத்தில் உள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற வளங்களுக்கு மனிதனால் பிரயோகிக்க கூடிய பாதக விளைவுகள் இரண்டை விளக்குக. (5 புள்ளி)

03. இலங்கைக்கு உரித்தான நிலையான தரைப்பகுதிகளில் நிலம் மட்டுமன்றி சமுத்திரத்தின் ஒரு பகுதியும் உரித்தாகும்.



(i) ஆள்புலக்கடல் எல்லை என எதை குறிப்பிடுகின்றனர்? (2 புள்ளி)


(ii) a) தரப்பட்ட படத்தில் B மற்றும் C இனால் குறிக்கப்படும் வலயங்களைக் முறைாகப் பெயரிடுக.

b) A வலயத்தினால் இலங்கைக்கு கிடைக்கும் வளம் என்ன? (3 புள்ளி)

(iii) a) வரலாற்று நீர் பிரதேசங்களுக்கு உரித்தான கடல் எல்லைகள் இரண்டை பெயரிடுக.

b) இலங்கையை சூழவுள்ள கடல்வளத்தின் முக்கியத்துவத்தை இரண்டு காரணங்களைக் காட்டி விளக்குக. (5 புள்ளி)

வினா இலக்கம் 4 மற்றும் 5 இற்கு விடையளிக்க கீழே உள்ள உலகப்படத்தை பயன்படுத்துக.



04. இயற்கை வளங்களுள் காடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

(i) a) B எழுத்தால் காட்டப்படும் பிரதேசத்தில் பரந்துள்ள காட்டு வகையை பெயரிடுக.

b) C எழுத்தால் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் உள்ள காட்டின் விசேட பண்புகளை குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) a) A எழுத்தால் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தை பெயரிட்டு அங்கு காணப்படும் காட்டு வகையை குறிப்பிடுக.

b) இக்காடுகளின் விசேட பண்புகள் இரண்டினை எழுதுக. (3 புள்ளி)

(iii) a) காடுகளும் வனஜீவராசிகளும் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

b) காடுகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை இரு காரணிகளை காட்டி விளக்குக. (5 புள்ளி)

05. மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளில் உற்பத்திக் கைத்தொழில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

(i) கைத்தொழில்களின் அமைவிடத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் இரண்டை எழுதுக. (2 புள்ளி)

(ii) a) படத்தில் இலக்கம் 1 இனால் காட்டப்படும் மோட்டார் வாகனக் கைத்தொழிலில் முன்னணி வகிக்கும் நாடு எது?

b) படத்தில் இலக்கம் 2 மற்றும் 3 இனால் காட்டப்பட்டுள்ள இரும்புருக்குக் கைத்தொழிலில் ஈடுபடும் நாடுகளை ஒழுங்கு முறையாக பெயரிடுக. (3 புள்ளி)

(iii) a) இரும்புருக்குக் கைத்தொழில் உற்பத்திகளுக்கான கேள்வி நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்கள் இரண்டை எழுதுக.

b) தற்போது மோட்டார் வாகன உற்பத்தி சந்தையை பெற்றுக் கொள்ள உலக நாடுகள் கடைபிடிக்கும் உபாயங்கள் 2 ஐக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

06. இயற்கை வளங்களுள் பாறைகள், மண் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

(i) உருமாறிய பாறைகள் எவ்வாறு உருவாகின்றது? விளக்குக. (2 புள்ளி)

(ii) a) அடையற்பாறைக்கு ஒரு உதாரணம் தருக.

b) தீப்பாறைகளின் பயன்கள் இரண்டை எழுதுக. (3 புள்ளி)

(iii) a) மண் உருவாக்கக் காரணிகள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

b) மண்ணைப் பாதுகாப்பதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

07. தற்காலத்தில் நெல்லானது இலங்கையின் நுகர்வுப் பயிராகவும் வர்த்தகப்பயிராகவும் முக்கியத்துவம் பெறுகின்றது.


(i) a) நெற்செய்கைக்கு பொருத்தமான மண்ணைக் குறிப்பிடுக.

b) தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தில் A எழுத்தால் காட்டப்பட்டுள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தை பெயரிடுக. (2 புள்ளி)

(ii) படத்தில் இலக்கம் 1, 2, 3 இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள இலங்கையில் நெல் உற்பத்தி செய்யப்படும் வலயங்களை பெயரிடுக. (3 புள்ளி)

(iii) a) இலக்கம் 4 இனால் குறிக்கப்படும் வலயத்தில் நெல் பயிரிடப்படும் முறையை குறிப்பிடுக.

b) தற்காலத்தில் நெற்செய்கை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)



08. இலங்கையில் தயாரிப்புக் கைத்தொழில் பல்வேறுபட்ட முறைகளின் கீழே விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

(i) பெற்றோலிய இரசாயன கைத்தொழில் என்பதனை விளக்குக. (3 புள்ளி)

(ii) a) பெற்றோலிய இரசாயன கைத்தொழிலுடன் தொடர்பான உற்பத்திகள் இரண்டை குறிப்பிடுக.

b) இக்கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டை எழுதுக. (3 புள்ளி)

(iii) a) உலகில் அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலத்திரனியல் கைத்தொழில் விசேட பண்புகள் இரண்டை குறிப்பிடுக.

b) இலத்திரனியல் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டை எழுதுக. (4 புள்ளி)

www.lkedu.lk

முதலாம் தவணைப் பரீட்சை - 2018
புவியியல் - தரம் 11
விடைப்பத்திரம்
பகுதி - 1

1. படைமண்டலம்	11 - ச	21. - பசோல்ட்	31. - படைமண்டலம்
2. மூடி	12 - ச	22. - மகர	32. - தித்திக்கா
3. இடைவெப்ப	13 - பி	23. - சோணாசம்	33. - சங்கமன்கந்த
4. அவுஸ்திரேலியா	14 - பி	24. - வட	34. - இறப்பர்
5. களுத்துறை	15 - ச	25. - ஆசியா	35. - கப்பல்
6. நெசவு	16 - 2	26. - A	36. - இலங்கை
7. உயிர்திணிவு	17 - 1	27. - H	37. - செம்மஞ்சட்பொட்சோ
8. ரதாவடுன்ன	18 - 3	28. - E	38. - காரீயம்
9. உருமாறிய	19 - 4	29. - P	39. - C மற்றும் E
10.A	20 - 4	30. - K	40. - E மற்றும் D

பகுதி II

01. அ. 1. மாவட்ட எல்லை
2. பாலம்
3. 45 மீற்றர்
4. பாடசாலை
5. தேங்காய்
6. தேசிய ஆள்கூறு
7. 4 கிலோமீற்றர்
8. ச
9. பி
10. ச

ஆ. 1. A 2. F 3. H 4. K 5. R

இ. 1. B 2. F 3. G 4. M 5. P

பகுதி III

02. (i) ஓடு, மேல்மூடி
(ii) (a) யுரேசியன் தகடு
(b) ஆபிரிக்க தகடு
(c) இந்து அவுஸ்திரேலிய தகடு
(iii) (a) மடகஸ்கார் - ஆபிரிக்க தகடு
பெரிய பிரித்தானியா - ஐரோ ஆசிய தகடு
(b) காடுகளை அளித்தல், தீ மூட்டுதல், கனிய வளங்களைப் பெற்றுக் கொள்ள நிலத்தை தோண்டுதல், கழிவு பொருட்களை கொட்டுதல்

03. (i) கடற் கரையோரத்தில் இருந்து 12 கடல் மைல்கள்
(ii) (a) அண்மித்த கடல் எல்லை
(b) தனித்துவ பொருளாதார வலயம்
(iii) (a) மன்னார் நீரிணை, வங்காள விரிகுடா, பாக்கு நீரினை
(b) மீன்பிடித் தொழில், போக்குவரத்து

04. (I) (a) இடைவெப்ப வலயக் காடுகள்
(b) மரங்கள் பெருமளவு கூம்புவடிவானவை, அதிக குளிருக்கு தாக்குப் பிடிக்கும் விதத்தில் இலைகள் ஊசி போன்று காணப்படுவது.
(ii) (a) கொங்கோ பிரதேசம் - அயன மலைக்காடுகள்
(b) உயிர்பல்வகை உயர்மட்டத்தில் காணப்படல், மரங்களில் இலைகள் அதிகம், மூடுதாவரங்கள் அதிகமுண்டு.
(iii) (a) காடுகள் அழிக்கப்படுதல், இயற்கை அனர்த்தங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காட்டுப் பிரதேசங்கள் அழிக்கப்படல், வியாபார நோக்குடன் தாவரங்கள் விலங்குகள் என்பன சேகரிக்கப்படுவதால் அவை அழிவடைதல்

www.lkedu.lk

5. (i) மூலப் பொருள், முயற்சி, வலு, உட்கமட்டமைப்பு வசதி

(ii) (a) 1. சீனா

(b) 2. பிரேசில் 3. ஜப்பான்

(iii) (a) இரும்புருக்கு நீண்டகாலப் பாவனையுடையது, நவீன தொழிநுட்பம் பாவிக்கப்பட்டது, நெகிழ்வுத்தன்மை

(b) பல்வேறு வகையான உற்பத்திகளை மேற்கொள்ளல், சகல வசதிகளுடனான மோட்டார் வாகனங்களை தயாரித்தல், உச்ச பாதுகாப்புடையதாக உற்பத்தி செய்தல்.

6. (i) தீப்பாறை, அடையற்பாறை, என்பன அதிக வெப்பம் அமுக்கம் என்பவற்றுக்கு உட்படும் போது இவை இயல்பு மாறுபட்டு உருமாறிய பாறை ஆகின்றது.

(ii) (a) சுண்ணக்கல், நிலக்கரி, உறைக்களிக்கல்

(b) கட்டடம் அமைத்தல், இலங்காரப் பொருட்களை ஆக்குதல், தகரம் குரோமியம் போன்ற கனியங்களைப் பெறுதல்.

(iii) (a) தாய்ப்பாறை, காலநிலை, காலம், தரைத்தோற்றம்

(b) காடுகளை வளர்த்தல், வாய்க்கால்களை வெட்டுதல், நிரல்முறையில் பயிரிடல்

7. (I) (a) வண்டல் மண்

(b) அம்பலந்தொட்ட

(ii) (a) வரண்ட வலயம்

(b) இடைமாறு வலயம்

(c) ஈரவலயம்

(iii) (a) படிமுறை அமைப்பு

(b) இயந்திரப் பயன்பாடு குறைவாக உள்ளதால் அதிக செலவு, வரட்சி காரணமாக பயிர்கள் அழிவடைதல், விவசாயிகளின் கடன்பழு, இளைய தலைமுறையினரின் பங்களிப்பின்மை

8. (i) சுத்திகரிப்பு ஆலையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவ எரிபொருட்களைப் பெற்றதன் பின்னர் மிகுதியாகும் பொருட்கள் மூலம் ஏனைய உப பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாகும்.

(ii) (a) பிளாஸ்திக், களைகொள்ளி, இரசாயன உரங்கள், பசளை, வர்ணங்கள்

(b) கனிய எண்ணெயின் விலை உயர்வு, உற்பத்திச் செலவு அதிகம், மூலதனப் பற்றாக்குறை, சந்தையில் போட்டி

(iii) (a) தொழிநுட்பவியலாளர்கள் உழைப்பாளராக கடமையாற்றுதல், பாரிய மூலதனம் தேவைப்படல், மின்சாரப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படல், அதிக வேலை வாய்ப்பு வழங்கக் கூடிய கைத்தொழில்

(b) சூழலில் கழிவுப் பொருட்கள் சேருதல், சுகாதாரப் பிரச்சினை ஏற்படல், குறுகிய காலத்தில் காலாவதியாதல், கலாசாரப் பிரச்சினைகள்

www.lkedu.lk